***ஐயம் :*** வெட்கப்படுவதால் சில காரியங்களின் பலனை அடைய முடிவதில்லை. ஆனால் இஸ்லாம் மார்க்கத்தில் வெட்கப்படுவது நல்லது என்கிறார்களே இது சரிதானா? ஆதாரங்களுடன் விளக்கவும்.

**A.** *இப்றாஹிம், பேரணாம்பட்டு*

***தெளிவு :*** கூச்ச சுபாவத்தினால் வெட்கப்படுபவர்கள் காரியங்களில் வெற்றி பெறுவது இயலாத காரியம். 4 பேர் இருக்கின்ற இடத்திற்குச் சென்று பேசக்கூச்சப்படுதல் கூடாது. நியாயமான தேவைகளைப் பெற உரிய அலுவலகம் சென்று தம் செய்திகளை முன் வைக்கக் கூச்சப்படக்கூடாது. மார்க்க பயான்கள் செய்வதற்கும், மக்களிடம் நேரிடையாகச் சென்று மார்க்கத்தை எடுத்து வைக்கவும் கூச்சப்படக்கூடாது. மொத்தத்தில் நல்ல காரியங்கள் செய்வதற்கு வெட்கப்படக்கூடாது.

ஆனால் பாவமான காரியங்களைச் செய்வதற்குக் கண்டிப்பாக வெட்கப்பட்டே ஆக வேண்டும். பாவச் செயல் களை எவை என்பன பற்றி, அல்லாஹ்வின் தூதர்(ஸல்) அவர்கள் மிக அழகாக கூறியிருப்பதைப் பாருங்கள் :

> **“எதைச் செய்யும் பொழுது உள்ளத்தில் (செய்யவும் ஆசை; செய்து விட்டால் அல்லாஹ் விடம் பாவியாகிவிடுமோ என்ற) குழப்பமும், மனதில் தடுமாற்றமும், மக்கள் பார்த்து விடக் கூடாதே என்ற எண்ணமும் ஏற்படுகிறதோ அது பாவச் செயலாகும்”** என்று அல்லாஹ்வின் தூதர்(ஸல்) அவர்கள் எடுத்துரைத்தனர்.

*அறிவிப்பவர் : நவ்வாஸ் பின் சிம்ஆன்(ரழி),*
*நூல்கள் : முஸ்லிம், திர்மிதி, முஸ்னத் அஹ்மத்*

வெட்கப்படுவதன் சிறப்பு குறித்து நபி(ஸல்) அவர்கள் கூறியுள்ளதையும் கவனத்தில் கொள்வோம் :

> **“ஈமான் என்பது 60 அல்லது 70க்கும் மேற்பட்ட வாசல்களைக் கொண்டதாகும். அதில் மிகவும் கடைசி நிலையில் உள்ளது, வழியில் கிடக்கும் தொல்லை தருபவற்றை அகற்றுவதாகும். வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத்தவிர வேறு எவரும் இல்லை என்ற கொள்கை அதில் உயர்ந்த நிலை யாகும். வெட்கப்படுவதும் ஈமானில் ஒரு பகுதி தான்”** என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

*அறிவிப்பவர் : அபூஹுரைரா(ரழி),*
*நூல்கள் : புகாரி, முஸ்லிம், இப்னு மாஜா*

எனவே இஸ்லாம் மார்க்கத்தில், ‘வெட்கப்படுவது நல்லது’ எனக்கூறப்பட்டது பாவமான காரியங்களை செய்வதற்கே என்பதைப் புரிந்து கொள்வோமாக!

ஜனவரி 2005 அந்நஜாத்